*Family Benefit Scheme for Power Board Staff.*

*729 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Family Benefit Fund Scheme now in force for Government Servants has been extended to Power Board Staff ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : ஆம். குடும்ப நல நிதி திட்டம் 21–6–1974-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் செயல்படுத்தப்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மாத ஊதியம் பெறும் பணியாளர் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் வருகின்றனர். மாதம் ரூ. 10 சந்தாவாக செலுத்தும் ஓய்வூதியம் வழங்கப்படும் பணியின் கீழ்வராத பணியாளர்கள் அயலிடப்பணியிற் சென்றுள்ள வாரியப் பணியாளர்கள், அல்லது முகமையிற் சென்றுள்ள வாரியத்தின் பணியாளர்கள், வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் முறையான பணியிலுள்ள ஊழியர்கள், தற்காலிகப் பணி அமைப்பிலுள்ள ஊழியர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின்கீழ் வருகின்றனர்.

திரு. எம். சுரேந்திரன் : இப்படி மின்சார வாரியப் பணியாளர்களுக்கு இருப்பதுபோல் இதர பல வாரியங்களில், டிரான்ஸ்போர்ட் வாரியம் போன்று இருக்கின்ற வாரியங்களில் இருப்பவர்களுக்கும் இது பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திருச்சிராப்பள்ளியில் திராட்சை பயிரிடல்

*730 வினு— திரு. பெ. சௌந்தர பாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திராட்சை பயிரிடுதலை ஊக்குவிப்பதற்கான திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.